

# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல்
ஜீவஒளியை அடைந்திருப்பான்."
யோவான் 8:12

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள்
தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி,
என் முகத்தைத் தேடி,
தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்,
அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு,
அவர்கள் பாவத்தை மன்னித்து,
அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன்.
2 நாளாகமம் 7:14

2021 ஏப்ரல் ~ ஜூன் வெளியீடு

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக் கூடிய **"ஜீவ ஒளி"** சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com

# பொருளடக்கம்


4 பிரியா அன்பு

5 மன்னித்தல்

7 மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட பேரன்பு

9 கர்த்தருக்கு பிரியமான உபவாசம்

10 வட்டிக்கு கொடு

14 பிரயாசப்படு

16 கர்த்தர் நம் நடுவிலே

19 அவள் ஒரு பாக்கியவதி

21 வெயில் ஏற அது உருகும்

# பிரியா அன்பு

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.**
**பிலிப்பியர் 4:13**

பவுல் அப்போஸ்தலனை தேவன் அநேகம் வேதனைகள் நிறைந்த பாதைகள் ஊடாகவே அழைத்துச் சென்றார். 2 கொரிந்தியர் 12:7-10. பவுலுக்கு மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருந்த “முள்” என்னவென்று இதுகாறும் தெரியாது. ஆகிலும், இது வேதனையுள்ளதாகவே இருந்திருக்கிறது. ஆகையால் தான், அதை எடுத்துப்போடும்படி மூன்று முறை கர்த்தரிடம் விண்ணப்பண்ணினார். முணுமுணுக்கிற சுபாவம் உடைய மனிதர் அவரல்ல. அவர் ஒருபொழுதும் தன் நிலைமையைப் பற்றி குறை கூறவில்லை. தனக்கு நேரிட்ட சோதனைகள், இடுக்கண்களைப் பற்றி முணுமுணுக்கவோ, முறையிடவோ இல்லை.

அவருக்கு நேரிட்ட இன்னல்கள் உபத்திரவங்களின் பட்டியல் 2 கொரிந்தியர் 11: 24 - 28 வரை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு மிகுந்த கொடிய பாடுகளின் மத்தியிலும் மகிழ்ச்சியுடனும், பொறுமையுடனும் இருந்தார். “ஐயோ! ஆண்டவரே இப்பேர்ப்பட்ட துன்பங்களின் வழியாக இனிமேலும் நடத்தி செல்ல வேண்டாம். இதுகாறும் நான் அனுபவித்தது போதும்” என்று ஒருபோதும் சொல்லவில்லை. இவையெல்லாம் போதாது என்று மாம்சத்தில் அப்போஸ்தலனுக்கு ஒரு முள்ளும் கொடுக்கப்பட்டிருந்தது. அது மிகவும் வேதனை அளித்தபடியால் அது நீங்க வேண்டுமென்று கர்த்தரிடம் மூன்று முறை விண்ணப்பம்பண்ணினார். ஆனால், கர்த்தரோ “என் கிருபை உனக்குப் போதும். உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்.” என்று ஆறுதல் படுத்தினார்.

அந்த முள் ஒரு நோக்கத்திற்காகவே கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது, முதலாவதாக அவர் தன்னை அளவுக்கு மீறி உயர்த்தாதபடிக்கு, தாழ்மையுள்ளவராக காத்துக் கொள்ளவும், இரண்டாவதாக உயிர்த்தெழுதலின் வல்லமையை அவரிடத்தில் செயல்படுத்தவும் அந்த முள் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே தான், “கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். பெருமைப்படுகின்றேன், மகிழ்ச்சியுமடைகின்றேன். ஏனென்றால், நான் இவற்றால் எனது கர்த்தரின் உயிர்த்தெழுதலின் வல்லமையை நிரூபிக்கின்றேன். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” என்று சாட்சி பகர்ந்தார். சகல அனுபவங்களையும் கடந்து சென்ற பின்னரே இவ்விதமாக சாட்சி கொடுத்தார். அவர் பசியாயிருந்தபோதும், பாடு அனுபவித்தபோதும் மலர்ச்சியுடன் காணப்பட்டார். அவரைக் கொண்டு தேவன் எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்தார். ஆனால், அவர் பசியால் வாடும்போதோ அப்படியே விட்டுவிட்டார்.

ரோமர் 8:36-39ல் இருப்பவை பவுலின் அனுபவங்கள். கர்த்தரின் உண்மைத்-துவத்தையும், உடன்படிக்கையையும் நாம் சோதித்து நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதற்கும், அதனூடே அவரின் உயிர்தெழுதலின் சக்தியை நாம் மென்லேும் அனுபவிக்கவும் நம்முடைய ஜீவியங்களில் தேவன் துன்பமளிக்கும் சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் வரவிடுகிறார்.

- Bro. Bakth Singh -



# மன்னித்தல்

சென்ற இதழின் தொடர்ச்சி...

மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியுடனும் மன்னிப்பதனால் ஒரு நபருக்கு உண்டாகிற நன்மைகள் ஏராளம்! “தனக்கு இழைக்கப்பட்ட ஒரு தீங்கை மன்னிக்க துணியும் போது ஒரு மனித ஆத்துமா பெலனடைவதைப் போல வேறு எந்த விதத்திலும் அது பெலனடையாது” நாம் மன்னிப்பதின் மூலமாக கிருபையின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்கிறோம் (எபேசியர் 1:7).

மன்னித்தல் என்பது மெய்யான ஞானமாயிருப்பதுடன், அதில் சகல ஞானமும் அடங்கியிருக்கிறது (எபே 1:8). அப்படியெனில் மன்னியாமல் இருத்தல் சகல விதத்திலும் மதியீனமாயிருக்கும்! மன்னித்தல் ஒருவர் சுகமடைவதற்கான ஒரு முன் நிபந்தனையாக இருக்கிறது (சங்கீதம் 103:3)

உண்மையில் கிறிஸ்துவை போல் மன்னித்தல், தேவனுடைய மிகச்சிறந்த ஆசீர்வாதங்களின் பொக்கிஷசாலையை நமக்குத் திறந்து கொடுக்கிறது. நம்முடைய கர்த்தர் நமக்கு மன்னித்தது போல நாமும் மற்றவர்களுக்கு மன்னிக்கக் கற்றுக்கொள்ளும்போது நம் கிறிஸ்தவ ஜீவியம் மெய்யாகவே சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷம் உள்ளதாக இருக்கும். மன்னிப்பு என்பது சுவிசேஷத்தின் மையமாக இருப்பது மாத்திரமல்ல அது மெய்யான கிறிஸ்தவ ஜீவியத்தின் மையமாகவும் இருக்கிறது. நாம் மன்னிக்க முடியாதவர்களாய் இருப்போமென்றால் நாம் “இருதயமில்லாத” கிறிஸ்தவர்களாகவே இருப்போம்! மன்னித்தல் எனும் சொல் முழு வேதாகமத்திலும் 76 முறை இடம் பெறுகிறது.

தேவன் எல்லா காலங்களிலும் பிறரை மன்னித்தவர்களை அவர்களது ஜீவியத்தின் எல்லா பகுதிகளிலும் உயர்த்தி மேன்மைப்படுத்தியிருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே மெய்யான தலைவர்களாய் விளங்க முடியும். யோசேப்பைப் போல அவர்கள் முழு உலகத்திற்கும் ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள்.

“திறமை உன்னை உயர்ந்த ஸ்தானத்திற்கு கொண்டுவரக்கூடும்; ஆனால் உன் சுபாவம் மாத்திரமே உன்னை அதில் நிலைகொள்ளச் செய்யும்” எனும் ஒரு பழமொழி உண்டு அது எவ்வளவு உண்மையானது.

மன்னிக்கிற ஜனங்கள் மேன்மை உள்ளவர்கள். ஒரு முறை ஆபிரகாம் லிங்கன் எனக்கு விரோதமாயிருப்பவர்களை நான் என் சிநேகிதராக்கும் பொழுது என் எதிரிகளை அழித்து விடுகிறேன் அல்லவா என்றார்.

இன்னுமொரு தேவனுடைய மனிதன் இவ்விதமாக ஜெபித்தார்: “கர்த்தாவே, என்னை ஒரு சமாதானத்தின் கருவியாக மாற்றும்; எங்கே பகை இருக்கிறதோ அங்கே அன்பையும், எங்கே குழப்பம் இருக்கிறதோ அங்கே சமாதானத்தையும், எங்கே இருள் இருக்கிறதோ அங்கே வெளிச்சத்தையும் எங்கே மனம் புண்பட்டிருக்கிறதோ அங்கே மன்னிப்பையும் நான் விதைக்கட்டும்”

நம்முடைய இரட்சகர் மன்னித்தது போல நாமும் மன்னிப்பது எப்படி? “போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியி-னாலே அவருடைய (கிறிஸ்துவினு-டைய) விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது” (யோவான் 19:34). இவ்வேதவாக்கியம், மன்னித்தல் என்ற பாடத்தின் ஆழமான ஆவிக்குரிய சத்தியங்கள் நிறைந்த ஒன்றாகும்.

போர்ச்சேவகன் நம் கர்த்தரை அவருடய விலாவிலே உருவக்குத்தின போது, உண்மையில் அது அவரு-டைய இருதயத்திற்குள் ஊடுருவிப்-பாய்ந்தது! உடனே அவருடைய இருதயத்திலிருந்து இரத்தமும் தண்-ணீரும் பெருக்கெடுத்துப் பாய்ந்தது.

அந்த ரோமப் போர்ச்சேவகன் கிறிஸ்துவின் இருதயத்தை உருவக்-குத்தினது போல சில வேளைகளில் நம்முடைய இருதயத்தை சிலர் உருவக்-குத்தக்கூடும். ஈட்டிகளினால் அல்ல, தங்கள் நாவினாலே!

அவர்கள் நம்மை புறக்கணித்து, அசட்டைப்பண்ணி, பரியாசம் செய்து, அல்லது நம்மைக் குறித்து எல்லாவித தீமையான மொழிகளையும் பொய்யாக பேசக்கூடும். அது நம் இருதயத்தை நொறுக்கிவிடக்கூடும். ஆனால், முக்கிய கேள்வி என்னவென்றால், இவை எல்லா-வற்றிற்கும் நம்முடைய பிரதிக்கிரியை எவ்வாறிருக்கிறது என்பதே.

நம்முடைய கர்த்தராகிய இயேசு-வின் இருதயம் குத்தப்பட்ட போது உண்டான பிரதிக்கிரியை என்னவாய் இருந்தது? “உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது”. கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் மன்னிப்பை குறிக்-கிறது. இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபே 1: 7)

நம்மை சுற்றியுள்ளவர்கள் நமது இருதயத்தை உருவக்குத்தும் போது நம்முடைய இருதயத்திலிருந்து அவர்-களுக்கு “மன்னிப்பு” புறப்பட்டு வர வேண்டும். தண்ணீர் அநேக காரியங்-களை குறிக்கிறது. அவைகளில் ஒன்று “தெய்வீக அன்பு” ஆகும். பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்க-ளில் ஊற்றப்படும் தேவ அன்பை “ஜீவத்தண்ணீர்கள்” என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிட்டிருக்கிறார் (யோவான் 7:38,39; ரோமர் 5:5)

நாம் உருவக்குத்தப்படும் போது நம்மை அவ்விதம் குத்துகிறவர்களுக்கு மன்னிப்பையும் தெய்வீக அன்பையும் வழங்க வேண்டும். சிலர் தங்களுக்கு விரோதமாக குற்றம் செய்தவர்களை சில வருடங்களுக்கு பின்னர் மன்னிக்க பிரயாசப்படுகின்றனர். ஆனால், “உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது” என்றே திருவசனம் சொல்லுகிறது.

போர்ச்சேவகன் கிறிஸ்துவை உருவக்குத்தும் போது இரத்தமும் தண்ணீரும் எங்கிருந்து புறப்பட்டு வந்தது? அவருடைய இருதயத்தில் இருந்து! நான் உன்னை மன்னிக்-கிறேன், உன்னை நேசிக்கிறேன் என்று சில வேளைகளில் நாம் நம்முடைய வாயினாலே சொல்லலாம். ஆனால் மன்னித்தலும் அன்பும் நம்முடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வர வேண்டும். இதுவே எல்லா வித்தியாசத்-தையும் உண்டு பண்ணுகிறது; இதுவே கிறிஸ்துவை போன்று மன்னித்தலாகும்.

தொடரும்...

- Paul Sebastian -

# மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட
# தெய்வீக பேரன்பு

❖ 1 யோவான் 4:9,10 - தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தமது குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

இப்பேரன்பானது எம்மை நித்தியத்திற்கும் பிழைக்க வைத்தது.

❖ ஏசாயா 49: 15 - ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.

தாயன்புக்கு மேலான ஒரு அன்பு இல்லையென்று உலக மக்கள் கூறுவார்கள். ஆனாலும், தாயன்பை விட இன்னும் அதிக அன்பை பாராட்ட ஒருவர் இருக்கிறாரென்று நாம் அறிந்திருக்க வேண்டும்.

❖ உபாகமம் 32:11 - கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்துகொண்டு போகிறது போல...

பாருங்கள், எவ்விதம் தேவன் எம்மை இவ்வுலகில் வாழ்வதற்கு பழக்குவித்து, பாதுகாக்கிறார் என்று!

❖ எபிரெயர் 12:6 - கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.

இவ்வசனத்தில் தேவனின் சீர்ப்படுத்தும் ஒரு நல்ல தகப்பனின் அன்பை காண்கிறோம்.

❖ எபிரெயர் 2:11,12 - எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்: உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இவ்வாறான ஒரு சிறந்த உறவு முறையை நமக்கு அருளியிருக்கிறார்.

❖ 1 யோவான் 4:19 அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால்... எரேமியா 31: 3 - அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.

தேவ அன்பானது நாம் பிறப்பதற்கு முன்பதாகவும், நித்தியம் வரைக்கும் தொடருகிற அன்பாயிருக்கிறது.

❖ யோவான் 15:15 - நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

இது ஆண்டவரின் மிக அருகாமையை, நட்பை நமக்கு காண்பிக்கிறது.

❖ எபேசியர் 5: 25,26,27 - கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமை உள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

இந்த அன்பானது அவரின் வருகை மட்டும் எம்மை தூய்மைப்படுத்தி ஆயத்தப்படுத்துகிறது.

- Tilaka Perumal -

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை
பிரிப்பவன் யார்? உபத்திரவமோ,
வியாகுலமோ, துன்பமோ, பசியோ,
நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?
இவையெல்லாவற்றிலேயும் நாம்
நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும்
ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.
மரணமானாலும், ஜீவனானாலும், தேவ
தூதர்களானாலும், அதிகாரங்களானாலும்,
வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களா–
னாலும், வருங்காரியங்களானாலும்,
உயர்வானாலும், தாழ்வானாலும்,
வேறெந்தச் சிருஷ்டியானாலும்
நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து
இயேசுவிலுள்ள தேவனுடைய
அன்பைவிட்டு நம்மை பிரிக்க
மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.
ரோமர் *8: 36 – 39*

## நமக்காக யாரும் இல்லையோ? ஒருவர் இருக்கிறார்

**தேற்றுவதற்கு ஒருவருமில்லை.**
***புலம்பல் 1: 2, 9, 17, 21***

தேற்றுவாரில்லை. ஆனால், ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களை தேற்றுவேன். (ஏசாயா 66: 13)

**விசாரிப்பதற்கு ஒருவருமில்லை.**
***சங்கீதம் 142: 4***

என்னை அறிவார் ஒருவரும் இல்லை; எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று; என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை. ஆனால், 1 பேதுரு 5:7, அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்.

**என் மீது பரிதாபப்பட ஒருமில்லை.**
***சங்கீதம் 69: 20***

எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; ஆனால், சங்கீதம் 135:14, கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர் மேல் பரிதாபப்படுவார்.

**நன்மை செய்வதற்கு ஒருவருமில்லை.**
***சங் 14: 3/ சங் 53:1/ ரோமர் 3:12***

எல்லாரும் வழிதப்பி, ஏகமாய் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. ஆனால், அப்போஸ். 10:38 - அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றி திரிந்தார்.

**பரிந்து பேசுவதற்கு ஒருவருமில்லை.**
***எசேக்கியேல் 22:30***

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனை தேடினேன், ஒருவனையும் காணேன். ஆனால், 1 யோ. 2:1/ ரோமர் 8:34/ யோ. 17:9,15,20 ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்.

- Benjamin Devadason -

# கர்த்தருக்கு பிரியமான உபவாசம்

மலை பிரசங்கத்தில் உபவாசத்தை குறித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறும் போது,

“நீங்கள் உபவாசிக்கும் போது மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (மத்தேயு 6:16) என்று கூறுகிறார்.

இன்றைய காலத்தில் நம்மில் பலர் தமது அன்றாட கடமைகளை செய்து கொண்டு உணவை மட்டுமே தவிர்த்து விட்டு, காண்பவரிடமெல்லாம் “நான் இன்று உபவாசம்” என கூறிக்கொண்டு இருக்கிறோம். இது கர்த்தருக்கு பிரியமான உபவாசமா? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஏசாயா 58:3ம் வசனத்தின் பிற்பகுதியில், “நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின் படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய் செய்கிறீர்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யும் போது தேவன் அந்த உபவாசத்தை நோக்காமலும் அறியாமலும் இருக்கிறார் என்று அதே வசனத்தின் ஆரம்பத்தில் பார்க்கிறோம். ஆகவே எமது முழு உபவாச வேளையையும் மற்றைய காரியங்களைத் தவிர்த்து கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நெகேமியா 1:4,5ம் வசனங்களை பார்க்கும் போது, தன்னுடையதும் இஸ்ரவேல் ஜனங்களுடையதும் பாவங்களை அறிக்கை பண்ணி வேண்டுதல் செய்யும் போது நெகேமியா உபவாசித்தே மன்றாடுகின்றான். நாமும் உபவாச வேளையில் தேவனை நோக்கியே ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாங்கள் உபவாசித்து ஜெபித்து எங்கள் வேண்டுதல்களை ஏறெடுக்கும் போது எங்கள் ஜெபம் கேட்கப்படும் என்பதை அப்போஸ்தலர் 10:30,31ல் கொர்நேலியுவின் வார்த்தையிலிருந்து அறிகிறோம்.

லூக்கா 18:12ம் வசனத்தில் பரிசேயன் தான் வாரத்தில் இரண்டு தரம் உபவாசிப்பதாக கூறுகிறான். அவன் தன்னைத்தானே உயர்த்தியதால் நீதிமானாக்கப்படவில்லை என்பதை இயேசு கூறிய வார்த்தையிலிருந்து அறிகிறோம். அவன் சுயமகிமையை தேடினான். அது கர்த்தருக்கு பிரியமான உபவாசமாயிராது.

நாமும் மாய்மாலக்காரரைப் போல் உபவாசிப்பதன் மூலம் சுய மகிமையை தேடாமல் கர்த்தருக்கு பிரியமான முறையில் உபவாசித்து கர்த்தர் ஒருவருக்கே மகிமையை செலுத்துவோமாக. அவர் நாமம் ஒன்றே மகிமைப்பட வேண்டும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

- Eunice Gloria Muraleetharan -

# வட்டிக்கு கொடு

வட்டிக்கு கொடுக்க கூடாது என்பதல்லவா பொதுவான கிறிஸ்தவ கோட்பாடு? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கூட, “திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன?” என லூக்கா 6:34ல் கேட்டுள்ளாரே, என யோசிக்கிறீர்களா?

ஆம், வேதாகம கோட்பாடுகளுடன் எவ்வித மாற்றுக்கருத்துக்களும் இல்லை என்ற போதிலும் மத்தேயு 25ல் உள்ள தாலந்துகளின் உவமையில் சொல்லப்படும் ஒரு வாக்கியத்தை ஆராய்ந்ததின் விளைவாகவே இக்கட்டுரை உருப்பெருகிறது.

மத்தேயு 25:14-31 வரையிலான பகுதியிலே, புறத்தேசத்துக்கு பிரயாணமாய் போகிற ஒரு மனுஷன் தன் ஊழியக்காரருக்கு அவரவருடைய திறமைக்கு தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்துச்சென்று, பயண முடிவிலே தன் ஊழியக்காரரிடம் கணக்கு கேட்கும் உவமை கதையை வாசிக்கின்றோம்.

அக்கதையிலே, தலா ஐந்து தாலந்துகளையும் இரண்டு தாலந்துகளையும் பெற்ற இரு ஊழியக்காரரும் தாங்கள் பெற்றதை இருமடங்காக பெருப்பித்து தங்கள் எஜமானிடம் நற்பெயர் பெற்றனர். ஒரு தாலந்தை பெற்றவன் மாத்திரம் தான் பெற்ற ஒரு தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்து அதை பயன்படுத்தாமல் எஜமானிடம் தண்டனையைப் பெற்றான்.

இந்த உவமைக்கதையை பற்றிய அருமையான படிப்பினையை 2012 ஜூலை மாதம் வெளிவந்த “ஜீவ ஒளி” சஞ்சிகையிலே ரமேஷ் சகோதரன் அருமையாக விளக்கியுள்ளார். www.christianfellowshipcentre.com எனும் இணையத்தளத்திலே இவ்விதழை வாசிக்கலாம்.

இந்த உவமைக்கதையில் வரும் மூன்றாம் ஊழியக்காரனைப்பற்றியும் தான் கொண்ட தாலந்திற்கு எப்படி வட்டி பெற்றிருக்கலாம் என்பதை பற்றியுமே நாம் இங்கு கலந்துரையாட இருக்கின்றோம்.

## எண்ணமே எதிரி

### எஜமானை பற்றிய தவறான எண்ணம்

“உன் சுயபுத்தியின் மேல் சாயாதே” என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைக்கோட்பாடுகளுள் ஒன்றாகும். இயல்பாகவே நாம் வளரும் சூழ்நிலைக்கு ஏற்ப நம் ஒவ்வொருவருக்குள்ளும் பல்வேறு விடயங்களைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வோர் சூழ்நிலையிலும் நமது கண்ணோட்டமும் அவற்றை நாம் எதிர்கொள்ளும் விதமும் ஒருவருக்கொருவர் வேறுபட்டவையாகும். இவ்வாறு, இயல்பாய் நாம் கொண்டிருக்கும் நமது எண்ணமே சில நேரங்களில் நமக்கு எதிரியாகிவிடுகிறது. இதைத்தான் யூதா 10ம் வசனத்தில், “சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக்கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.” என சொல்லப்பட்டிருக்கிறது.

அதே வசனத்தின் ஆரம்பத்தில், “இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்.” எனவும் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக நாம் சில விடயங்களை அறிந்திருந்தாலும் நாம் அறிந்தவற்றை விட நாம் அறியாதவையே அதிகம் என்பது

மறுக்க முடியாத உண்மை ஆகும். அவ்வாறு நாம் அறியாத பலவற்றுள் ஒன்று தான் தேவனின் மனம்.

நமக்கு மிக அன்பானவர்களுடைய மனதையே சில சமயங்களில் நம்மால் புரிந்து கொள்ள முடியாதிருக்கையில் தேவனின் மனதை தெளிவாய் அறிந்து கொள்வது எவ்வளவு கடினம் என்பது நிதரிசனம்.

இவ்வுவமைக்கதையில் வரும் மூன்றாம் ஊழியக்காரனுக்கு இருந்த தவறான எண்ணங்களில் ஒன்று தான் தன் எஜமானைக் குறித்த தவறான கருத்து. தன் எஜமான் முன்னதாக சில சந்தர்ப்பங்களில் நடந்துகொண்ட விதங்களை தவறாக புரிந்து கொண்ட இவன், தன் எஜமான் "விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன்" என கூறுவதன் மூலம் அவர் அநியாயமாய் நடந்து கொள்பவர் என்ற தப்பான எண்ணம் கொண்டிருந்தான் என நாம் புரிந்து கொள்கிறோம்.

நாமும் சில நேரங்களில், ஏன் தேவன் செயற்படாமல் இருக்கிறார்? ஏன் தீயவர் செழிக்க இடங்கொடுக்கிறார்? என நினைப்பதுண்டல்லவா! இன்னும் சிலர், "தேவனை பற்றி கேள்விப்படாதவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களை தண்டித்தல் நியாயமாகுமா?" என தேவனையும் மிஞ்சிய நீதி தங்களுக்கு உள்ளது போல் கேள்வி கேட்பார்கள்.

கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவை, அவருடைய வழிகள் ஆராயப்படாதவை!

கர்த்தருடைய மனதை அறிதல் அரிதாயினும் அதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே அவரின் விருப்பமாகும். அவ்வண்ணம் தேவனின் மனதிற்கு ஏற்ற படி நடந்து கொண்ட தாவீதைப்பற்றி, "தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்" என தேவனே அப்போஸ்தலர் 13:22ல் சாட்சி கொடுத்திருக்கிறார்.

அது மட்டுமன்றி, "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" என சங்கீதம் 34:8ல் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, நாம் கர்த்தருக்கு உத்தமமும் உண்மையும் உள்ள ஊழியக்காரராய் இருக்க வேண்டுமாயின், கர்த்தர் நம்மை நம்பி தமது ஊழியத்தில் ஓர் பொறுப்பை நமக்கு தர வேண்டுமாயின் முதலில் நாம் தேவனை சரியாக அறிந்து கொள்ள வேண்டும். தேவனைப்பற்றி நாம் கொண்டுள்ள இயல்பான எண்ணங்களையும் மற்றவர் கூறும் கருத்துக்களையும் விட, பரிசுத்த வேதாகமம் அவரை எவ்வாறு நமக்கு வெளிப்படுத்துகிறது என்பதை அவருடைய ஆவியானவரின் உதவியுடன் பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும் கிரமமாக கற்றுக்கொள்வதின் மூலமாகவும் தேவனோட உயிரோட்டமான உறவை அனுதினம் பேணுவதினாலும் நாம் அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். 1 கொரிந்தியர் 2:11.

## தனக்கு இல்லை என்ற எண்ணம்

மூன்றாம் ஊழியக்காரனைப்போல் நாமும் நமக்கு கிடைத்திருக்கும் தாலந்தை பயன்படுத்தாமல் இருக்க

காரணம், மற்றவர்களுக்கு கிடைத்ததை போல் நமக்கு கிடைக்கவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை மிக்க நமது எண்ணமாயிருக்கலாம்.

சில சமயங்களில், நம்மை விட சிறப்பாகவும் பிரபலமாகவும் மற்றவர்கள் ஊழியத்தில் ஈடுபடுவதை நாம் காணும் போது, ஊழியஞ்செய்யத்தக்க விதத்திலான எந்தவொரு திறமையும் தேவன் நமக்கு கொடுக்கவில்லையே என எண்ணி நாம் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து விடுகிறோம். இந்த எண்ணம் தவறாகும்.

இந்த உவமைக்கதையில் வரும் எஜமான் தன் ஊழியக்காரருக்கு கொடுத்த அளவுகளில் வேறுபாடு இருந்தது உண்மை என்ற போதிலும் எந்தவொரு ஊழியக்காரனுக்கும் எதுவும் கொடாமலிருக்கவில்லை.

அதே போலத்தான், வரங்களில் வித்தியாசங்கள் இருந்தாலும் தேவனுடைய ஆவியானவராகிய அந்த ஒரே அவியானவர் தமது சித்தத்தின் படியே அவனவனுக்கு அவற்றை பகிர்ந்து கொடுக்கிறார் என 1 கொரிந்தியர் 12ல் எழுதப்பட்டுள்ளது. மேலும், தேவனுடைய சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறபடியினாலே சரீரத்தையே ஓர் உதாரணமாய்க்கொண்டு, "சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே." என அதே அதிகாரத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது.

எனவே, தேவனுடைய சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இணைக்கப்பட்டிருக்கும் எவரொருவருமே தனக்கு தேவன் ஊழியத்துக்கேற்ற திறமையை கொடுக்கவில்லை என எண்ணலாகாது. மாறாக, "ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்" என அப்போஸ்தலர் 9:6 இல் பவுல் கேட்டது போல நாமும் தேவனிடம் கேட்க வேண்டும்.

"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்" பிலிப்பியர் 1:5

"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்." எபேசியர் 2:10

## தன்னால் முடியாது என்ற எண்ணம்

மற்றவர்கள் அளவிற்கு நம்மால் பெறுபேறு விளைவிக்க முடியாது என்ற நமது எண்ணமே சில நேரங்களில் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபடுவதற்கு நாம் தயங்கக்காரணம் ஆகின்றது.

பாருங்கள்! முதலாம் ஊழியக்காரன் பத்து தாலந்துகளையும் இரண்டாமவன் ஐந்து தாலந்துகளையும் மேலதிகமாக சம்பாதித்தார்கள். என்னால் அந்த அளவு சம்பாதிக்க முடியாது என அந்த மூன்றாம் ஊழியக்காரன் எண்ணியிருக்கலாம். அவ்வெண்ணமும் சோம்பலின் ஓர் விளைவேயாகும்.

ஆனால், இங்கு சுவாரசியமான விடயம் என்ன தெரியுமா? இக்கதையில் வரும் எஜமான் தன் ஊழியக்காரரிடம் தாலந்துகளை கொடுத்துச்சென்றாலும், தான் வரும் போது ஒவ்வொருவரும் இவ்வளவு சம்பாதித்திருக்க வேண்டும் என எந்தவொரு அளவையும் நியமித்து செல்லவில்லை. எவ்வளவாவது சம்பா-

தித்திருக்க வேண்டும் என்பதே எஜமானின் எண்ணமாயிருந்தது என்பதை மூன்றாம் ஊழியக்காரனுக்கு அவர் கொடுக்கும் பதிலிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

எப்பொழுதுமே, நாம் தேவனுக்கென செய்யும் ஊழியத்தின் விளைவை மற்றவர்களுடன் ஒப்பிடாதிருப்பதே சாலச்சிறந்ததாகும்.

சில சமயங்களில் நாம் செய்யும் ஊழியத்தின் பலன் நாம் இறந்ததின் பின்னரே வெளிப்படும். விளையச்செய்கிறவர் தேவன். நடுவதும் நீர்ப்பாய்ச்சுவதுமே நம் வேலை.

“உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.” பிரசங்கி 11:1

## வட்டிக்கு கொடு

மூன்றாம் ஊழியக்காரனுக்கு எஜமான் சொன்ன யோசனையாவது, அவன் பெற்றிருந்த தாலந்தை காசுக்காரரிடம் கொடுத்திருந்தால் அதினுடைய வட்டியை பெற்றிருக்கலாம் என்பதாகும். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் தான் என்ன?

காசுக்காரர் என்பவர்கள் தங்களிடம் பணம் கொடுத்தவர்களுக்கு வட்டி கொடுக்கிறார்கள் என்றால் அதின் அர்த்தம் என்ன? தங்களிடம் கொடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு மேலதிக பணம் சம்பாதிக்கத்தெரிந்தவர்கள் அவர்கள் என்பதல்லவா? இந்த மூன்றாம் ஊழியக்காரனிடம் இருந்த தொகை சிறிதாயினும் அதைக்கொண்டு எப்படி மேலதிக பணம் திரட்டுவது என்பதை அறியாத போதிலும் தன்னிடம் இருந்த பணத்தை காசுக்காரரிடம் கொடுத்திருந்தால் அவர்கள் அதை பெருப்பித்திருப்பார்கள் அல்லவா?

எனின், நம்மிடம் உள்ள யாதுமொரு திறமையை அல்லது வரத்தை பயன்படுத்துவது எப்படி என்று நாம் அறியாமல் அல்லது முடியாமல் இருந்தால் நாம் செய்யக்கூடிய ஒரு விடயம் தான் அந்த திறமையை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுப்பது. அதின் மூலம் நம்மிடம் கற்றுக்கொண்டவர்கள் அதை செவ்வனே பயன்படுத்தி அதினால் பலனுண்டாக்குவார்கள். பரிசுத்த வேதாகமத்திலும் சபை வரலாற்றிலும் இதற்கான பல உதாரணங்களை நாம் காணலாம்.

நாகமானின் மனைவியிடம் வேலை செய்த சிறுமி, ஐயாயிரம் பேருக்கு உணவளிப்பதற்காக தன் ஐந்து அப்பங்களை கொடுத்த சிறுவன், தீமோத்தேயுவுக்கு வேத வாக்கியங்களை கற்றுக்கொடுத்த அவனது தாயும் பாட்டியும், இன்னும் பெயர் குறிப்பிடப்படாமல் இருக்கும் பல வேதாகம கதாப்பாத்திரங்கள், மற்றும் பல மிஷனரிமார்களுடைய சிறு பிராயத்தில் அவர்களை சபைக்கு அழைத்து வந்தவர்கள் என எத்தனையோ உதாரணங்களை நாம் நினைத்துப்பார்க்கலாம்.

“அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.” (2 தீமோத்தேயு 2:2)

எனவே நாம், தேவன் நம்மை எதற்காக அழைத்திருக்கிறாரோ அதை உத்தமமும் உண்மையுமாக செய்வதோடு மற்றவர்களையும் பயிற்றுவிப்போம். விளைவுகளை பாராது ஊழியம் செய்வோம். நம்முடைய பிரயாசத்தை மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே. (எபிரெயர் 6:10)

- S. Varaprasath -



# பிரயாசப்படு

அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். பிலிப்பியர் 2:12

நாம் செய்யும் எந்த ஒரு விடயத்திலும் முழுப்பலனையும் பெற வேண்டும் என்றால் பிரயாசப்பட வேண்டும். அப்போது தான் எம்மால் திருப்தி அடைய முடியும்.

நாம் எதுவுமே செய்யாமல், எந்தத் தகுதியுமே இல்லாமல் எமக்கு கிடைப்பது இரட்சிப்பு மாத்திரமே.

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.” எபேசியர் 2:8.

“இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்” ரோமர் 3:24.

அப்படியானால் இரட்சிப்பு நிறைவேற ஏன் பிரயாசப்பட வேண்டும். அந்த பிரயாசம் என்ன?

## 1) தேவனோடு எமக்குள்ள உறவு

தேவனோடு எமக்கு உறவை ஏற்படுத்திக்கொள்ள ஒரே வழி ஜெபமும் வேத வாசிப்புமே. ஜெபிக்கும் போது நாம் தேவனோடு பேசுகிறோம். வேதம் வாசிக்கும் போது தேவன் எம்மோடு பேசுகிறார். நம்மில் அநேகர் ஜெபித்தால் வேதம் வாசிப்பதில்லை; வேதம் வாசித்தால் ஜெபிப்பதில்லை. இவ்விரண்டில் முக்கியம் எது என்று பார்த்தால், இரண்டுமே முக்கியம். இரண்டு பேர் சம்பாஷிக்கும்போது ஒருவர் மாத்திரமே பேசினால் அது நல்ல உறவை ஏற்படுத்தாது. இது எளிதான காரியமல்ல. வரும் தடைகளை நாம் எப்படி மேற்கொள்ளலாம்? எமக்கு நல்ல மனநிலை இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. மனது எப்போதுமே சஞ்சலம் நிறைந்ததும் தடுமாறுகிறதுமாய் சிந்தனைகள் அங்குமிங்கும் சிதறிக்கொண்டேயிருக்கும். எமது கிறிஸ்தவ வாழ்க்கை உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்ல விசுவாசத்தின் அடிப்படையிலேயே கட்டப்பட வேண்டும்.

“விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.” எபிரேயர் 11:6.

இவ்விரண்டையும் நாம் ஒரு அப்பியாசமாக செய்ய வேண்டும். இதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், உங்கள் எதிராளியான பிசாசானவன் கர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8)

## 2) சபை ஐக்கியம்

இந்நாட்களில் ஒரே குடும்பமாக ஒன்று கூட எம்மால் முடியாமல் இருக்கலாம். ஆனால், தொலைபேசி மூலம் எம்மால் தொடர்பு கொள்ள முடியும். இதற்கெல்லாம் ஏது நேரம் என்று சாக்கு போக்கு சொல்ல வேண்டாம். நாம் எவ்வளவு நேரம் தொலைக்காட்சிக்கு முன்பாக உட்கார்ந்து எமது நேரத்தை செலவழிக்கிறோம்! ஒரு 10 நிமிடம்

எம்மால் தேவ பிள்ளைகளோடு பேச முடியாதா? சக விசுவாசிகளோடு நல்ல உறவுகளை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சபை கூடுதலை சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடக்கூடாது - எபிரேயர் 10:25.

### 3) சாட்சி பகிர்தல்

மத்தேயு 28:19, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜனங்களையும் சீஷராக்குங்கள்.

இதை யார் செய்ய வேண்டும்? இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரினதும் கடமை. ஏனெனில் இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாபெரும் கட்டளை.

சீஷன் என்றால் குருவை பின்பற்றுகிறவன். அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவன். இன்று அநேகர் சீஷராக்குகிறேன் என்று கூறி தமது அடிமைகளாகவும் தங்களுடைய சொந்த வேலைகளுக்காகவுமே பயன்படுத்துகிறார்கள். சீஷராக்குவது என்பது, மரண பரியந்தம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றச் செய்வதே ஆகும். நாம் எத்தனை பேருக்கு சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறோம்? அவர்களின் நிலைமை என்ன, அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது எமக்கு தெரியுமா? நாம் ஒருவருக்கு சுவிசேஷத்தை அறிவித்தால், அவர்களோடு தொடர்பு வைத்து கொள்ள வேண்டும். அவர்களை தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வழி நடத்த வேண்டும்.

பவுல் அப்போஸ்தலன் தனது மிஷனரி பயணங்களில் பயணம் மிக கடினமாக இருந்த போதிலும் அவர் மறுபடியும் போய் சுவிசேஷம் அறிவித்தவர்களை பார்ப்பதை வாசிக்கிறோம். அவரால் போக முடியாத போது, உண்மையுள்ள ஊழியக்காரரை அவர் அனுப்புகிறார். அத்தோடு அவர் நின்று விடவில்லை. கடிதங்களை எழுதி அவர்களை விசாரிக்கிறார்.

இவற்றை நாம் செய்யும் போது நாம் முதிர்ச்சியடைந்த விசுவாசிகளாகவும் தேவனுக்கு பிரியமானவர்களாகவும் இருக்கிறோம்.

- Grace Fernando -

**ஆண்டவர் இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பணிகள்**

ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரால் அவதரித்தார்.
லூக்கா 1:35

ஆண்டவரில் புறாவைப் போன்று அமர்ந்தருளினார்.
மத்தேயு 3:16/ லூக்கா 3:22

ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரால் முற்றும் முழுவதுமாய் நிறைந்திருந்தார்.
லூக்கா 4:1

ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்.
லூக்கா 4:14/ மத் 4:1

ஆண்டவரின் ஊழியம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நடைமுறைபடுத்தப்பட்டது
லூக்கா 4:14

ஆண்டவர் நித்திய ஆவியினாலே தேவனுக்கு ஊழியஞ் செய்தார்.
எபிரெயர் 9:14

ஆண்டவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார்.
1 பேதுரு 3:18/ ரோமர் 8:11

# கர்த்தர் நம் நடுவிலே



வாசிப்பு:
செப்பனியா 3: 5, 15, 17

இந்த 3 வசனங்களை வாசிக்கும் போது "மத்தியில்" என்ற பொதுவான சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். இந்த சொல் எமக்கு மிகவும் பரீட்சயமான சொல்லாக இருக்கக்கூடும். ஏனெனில் வேதாகமம் முழுவதிலும் இது ஒரு முக்கிய கருப்பொருளாக பயணிக்கிறது. (உதாரணம்: யாத் 25:8, மத் 18:20, வெளி 21:3)

இவற்றுள் செப்பனியா 3:17 உம் ஒரு பிரசித்தமான வசனமாகும். செப்பனியா 3 ஆம் அதிகாரத்திலுள்ள இந்த 3 வசனங்களுள் கர்த்தருடைய 3 பண்புகள் வெளிப்படுத்தப்படுகிறது.

வசனம் 5 - கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதியாக மக்கள் மத்தியில் இருக்கிறார்.

வசனம் 15 - கர்த்தர் ஆளுகை செய்யும் ராஜாவாக மக்கள் மத்தியில் இருக்கிறார்.

வசனம் 17 - கர்த்தர் வலிமைமிக்க போர்வீரனாக அவரது மக்கள் மத்தியில் இருக்கிறார்.

ஆகவே இதிலிருந்து நாம் ஆவிக்குரிய பாடங்களையும் வழிமுறைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

### 1. கர்த்தர் வலிமைமிக்க போர்வீரனாக அவரது மக்கள் மத்தியில் இருக்கிறார்.

இங்கு நாம் கர்த்தர் வலிமைமிக்க போர்வீரனாக தம்முடைய ஜனங்களின் மத்தியில் இருந்து அவர்களை இரட்சிப்பார் என்பதை காண்கிறோம். இந்த வலிமை மிக்க போர்வீரன் குறித்ததான 3 விடயங்களை நான் உங்களுக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன்.

#### அ) எங்கள் இரட்சிப்பின் அதிபதி (எபிரேயர் 2:10)

தேவனுக்கு முன்பாக நாம் பாவிகளும் விரோதிகளுமாய் இருந்தோம் (ரோமர் 5:8,10); நாம் பலனற்றவர்களாகவும் எமது இரட்சிப்புக்காக எதையும் செய்ய திராணியற்றவர்களாகவும் இருந்தோம் (ரோமர் 5: 6); பாவத்தின் பலனாக மரணமும் அழிவும் நரகத்தில் எமக்காக விதிக்கப்பட்டிருந்தது (ரோமர் 6:23)

நாம் இருளிலும் சாத்தானின் ஆதிக்கத்திலும் வைக்கப்பட்டிருந்தோம் (அப்போஸ்தலர் 26:18). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் பிறந்து எம்மை மீட்க வந்து இந்த உலகத்தின் இரட்சகரானார் (மத்தேயு 1:21). அவர் கல்வாரி சிலுவையில் வல்லமைமிக்க போர்வீரனாக யுத்தம் செய்து எமக்காக மரணத்தை ருசிபார்த்து சாத்தானையும் மரணத்தின் பலத்தையும் ஜெயித்து

எமது இரட்சிப்பின் தலைவரானார் (எபிரேயர் 2: 14, 15)

சற்று நேரம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவை மரணம் ஒரு தோல்வியாகவும் சாத்தானுக்கு வெற்றியாகவும் காணப்பட்ட போதிலும் மறுபடியுமாக மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்ததின் மூலமாக வெற்றி சிறந்து எங்கள் இரட்சிப்பின் தலைவரானார். ஆகவே எங்கள் மத்தியிலிருக்கும் வல்லமை மிக்க போர் வீரனாகிய கர்த்தர் நம்மை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார்.

உங்களது இன்றைய நிலைமை எப்படிப்பட்டதாயிருந்தாலும் நீங்கள் எவ்வளவு மோசமான பாவியாயிருந்தாலும் சாத்தான் உங்களை எவ்வளவு இறுக்கமான பிடியில் வைத்து இருந்தாலும் நீங்கள் உங்கள் மத்தியிலிருக்கிற போர் வீரனாக கர்த்தரை விசுவாசித்தீர்களேயானால் அவர் உங்களை இரட்சிக்க வல்லமை உள்ளவராக இருக்கிறார்.

### ஆ) உலகத்தை வெல்பவர் (யோவான் 16:33)

உலகத்தை விட்டு பிரிந்து பயபக்தியுள்ள வாழ்க்கை வாழும் பொழுது உலகம் எமக்கு விரோதமான சூழலாக மாறும் (யோவான் 15:9, 17:14). நாம் இயேசு கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழும் போது அதின் விளைவாக அநேக எதிர்ப்புகளுக்கும் உபத்திரவங்களுக்கும் பாடுகளுக்கும் முகம் கொடுக்க நேரிடும். சில நேரங்களில் இப்படிப்பட்ட அனுபவங்களுக்கு மத்தியில் நாம் உதவியற்று எதிர்பார்ப்பு அற்று வாழும் ஒரு தோல்வியுற்ற விசுவாச குழுவாக எம்மை நினைக்கக்கூடும்.

ஆனாலும் கர்த்தர் நமக்கு நினைவூட்டுவது என்னவெனில், நாம் பல விரோதங்களுக்கு முகங்கொடுத்தாலும் பல பாடுகள் நேரிட்டாலும் அவர் நம் மத்தியில் உலகத்தை ஜெயித்த வல்லமையுள்ள போர்வீரராக இருக்கிறார்.

நம்மை சுற்றி நமது சூழ்நிலை எப்படியிருந்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் நம்மையும் உலகம் எவ்வாறு நடத்தினாலும் அயராதிருப்போம். நம் மத்தியில் இருக்கும் கர்த்தர் உலகத்தை வென்ற, வெல்கிற வல்ல போர்வீரராவார். ஆகவே, உலகத்தை ஜெயிக்கிற அந்த விசுவாசத்தோடு இருப்போம். 1 யோவான் 5:4.

எதிர்ப்புகள், உபத்திரவங்கள் மத்தியிலும் நம் இருதயங்கள் சமாதானத்தால் நிறைந்திருக்கட்டும்.

### இ) நம் ஆத்துமாவில் கரிசனை கொண்ட மேய்ப்பன் (யோவான் 10:12)

மேய்ப்பன் என்பவன் ஆடுகளை தயவாய் பராமரிக்கும் தயவுள்ளம் கொண்ட ஒருவன் என்பதே பொதுவாக ஒரு மேய்ப்பனைப்பற்றி நமது எண்ணமாகும். ஆனால் வேத வாக்கியங்களை வாசிக்கும் போது, ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பதற்காக ஓர் பராக்கிரமசாலியாகவும் வீரனாகவும் நடந்துகொள்வான் என தாவீதின் வாழ்க்கையில் இருந்து நாம் புரிந்து கொள்கிறோம் - 1 சாமுவேல் 17:34-36. அது போலவே, நம் மத்தியில் இருக்கிற வல்ல போர்வீரராகிய

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை எல்லா ஆபத்துகளில் இருந்தும் பாதுகாத்து நம் ஆத்துமாக்களின் மீது கரிசனை கொள்கிற மேய்ப்பனாயிருக்கிறார்.

நம் வாழ்வை நாம் பார்க்கும்போது, கரிசனைமிக்க நம் மேய்ப்பர் ஓர் வல்ல போர்வீரராக எவ்வண்ணம் நம் வாழ்வின் யுத்தங்களில் நமக்காக போராடி தம் பணியை நிறைவேற்றி-யிருக்கிறார் என்பதை காண்கிறோம். இவ்வருடத்தின் எல்லா பேரழிவுகளுக்கு நடுவிலும் நம் மேய்ப்பன் நம் மத்தியில் இருக்கும் போது நாம் எதைக்குறித்தும் கவலைப்படவோ வியாகுலப்படவோ அவசியமில்லை. நம் ஆண்டவராகிய வல்ல வீரர் நம் மத்தியிலே நம் ஆத்துமா மீது கரிசனை மிக்க மேய்ப்பனாக இருப்பதினால் நாம் தைரியமாயிருப்போம்.

அவர்,

நமக்கு சம்பவிக்கும் எல்லாவற்றில் இருந்தும் நம்மை பாதுகாக்கிறார்
சங்கீதம் 23:4

நமக்கு தேவையானதை வழங்கி, நம்மை பசும்புல்வெளியில் நடத்தி நம்மை திருப்தியாக்கி, ஒவ்வொரு தடையையும் அகற்றி தண்ணீர்களை அமைதியாயிருக்கச்செய்கிறார்.
சங்கீதம் 23:2

நம் வாழ்வில் அவருடைய நோக்கங்கள் நிறைவேறச்செய்கிறார். அவருடைய திட்டங்களையும் நோக்கங்-களையும் எது ஒன்றாலும் தடுக்க முடியாது.
சங்கீதம் 23:3,6

- Dinesh Malcolm Paul -

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### உ இராஜாக்கள்

அதிகாரங்கள் : 25
வசனங்கள் : 719

### வட இராஜ்ய அரசர்கள்

- யெரொபெயாம்
- நாதாப்
- பாஷா
- ஏலா
- சிம்ரி
- ஒம்ரி
- ஆகாப்
- அகசியா
- யோராம்
- யெகூ
- யோவாகாஸ்
- யோவாஸ்
- யெரொபெயாம்
- சகரியா
- சல்லூம்
- மெனாகேம்
- பெக்காகியா
- பெக்கா
- ஓசெயா

### தென் இராஜ்ய அரசர்கள்

- ரெகொபெயாம்
- அபியா
- ஆசா
- யோசபாத்
- யோராம்
- அத்தாலியாள்
- அகசியா
- யோவாஸ்
- அமத்சியா
- உசியா
- யோதாம்
- ஆகாஸ்
- எசேக்கியா
- மனாசே
- ஆமோன்
- யோசியா
- யோவாகாஸ்
- யோயாக்கீம்
- யோயாக்கீன்
- சிதேக்கியா

# அவள் ஒரு பாக்கியவதி

- Helen Niroshani -

### அறிமுகம்

பெண்ணியம் மற்றும் பெண் சமத்துவம் குறித்து பரந்த அளவில் பேசப்பட்டு வரும் இந்த நாட்களில் பரிசுத்த வேதாகமத்தில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் மற்றும் சில முக்கியமான பெண் கதாபாத்திரங்களின் வாழ்க்கையை மையப்படுத்தி இனிவரும் இதழ்களில் தொடர் கதை எழுதலாம் என எண்ணியுள்ளேன். அதில் முதல் கட்டமாக பழைய ஏற்பாட்டிலே முதல் பெண் தீர்க்கதரிசி என குறிப்பிடப்படும் ஒரு பெண், பலரால் பல விதமாக விமர்சிக்கப்படும், பேசப்படும் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பற்றியும் அதன் மூலமாக நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நடை முறைக்கு அவசியமான விடயங்களை உள்ளடக்கிய ஒரு சிறுகதை இதோ!

### கரிசனை மிகு மீரியம்

எகிப்தின் கொடை என அழைக்கப்படும் நைல் நதியின் ஆழங்களில் இத்தனை அலறல்களும் கூக்குரல்களுமா! நதியின் கரையோரத்தில் அடர்ந்து வளர்ந்திருக்கும் நீண்ட தாவரங்களுக்குப் பின் ஒளிந்திருந்தவாறு, கண்கள் மட்டுமே தெரியும் வகையில் இலைகளை விலக்கியபடி, சற்றே தூரத்தில் நாணல்களுக்கு நடுவே மிதந்து கொண்டிருக்கும் நாணற்பெட்டியை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும் மீரியாமின் கண்கள் இமைக்கக்கூட மறுக்கின்றன. ஏதோ ஒரு இனம் புரியாத பயம் இதயத்தை உலுக்கிக்கொண்டிருந்தாலும், தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக்கொண்டவளாக மறுபடியும் அந்த பெட்டியின் திசையை விரிந்து நோக்குகின்றன அவள் கண்கள்.

சற்று நேரத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்கவே, திரும்பி பார்த்தவள் மீண்டும் அந்த மரங்களின் இலைகளுக்குள் தன்னை நன்றாய் மறைத்துக்கொள்கின்றாள்.

இந்தத் தருணம் நடக்கவிருக்கும் நிகழ்வை தன்னால் யூகிக்க முடியாவிட்டாலும் கூட கண்களை இறுக்கி மூடிய படி தேவனை வேண்டுகிறாள். (சிரிப்பு மற்றும் சலசலப்பு!) ஆம், அது பார்வோனின் மகள் தான். சேடியர் காவலர் சூழ அவ்வழியே மிடுக்காய் நடந்து வரும் எகிப்திய இளவரசி, பார்வோனின் மகள் இதைக் கண்டால் நடக்கப்போவது என்ன? எதுவாக இருந்தாலும் வேடிக்கை மட்டுமே பார்க்க முடியும் என்ற நிலையில் படபடக்கும் இதயத்தின் உணர்வுகளை அடக்கிக் கொண்டவாறு விரிந்த கண்களுடன் வெறித்து பார்த்துக்கொண்டிருக்கின்றாள்.

நதியருகே சென்ற இளவரசி தன் ஆபரணங்களை களைந்து தோழிகளிடம் கொடுத்தவாறே தூரத்தில் நாணல்களுக்கு நடுவே விசித்திரமாய் வைக்கப்பட்டிருந்த அந்த பெட்டியைப் பார்க்கிறார். என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்வதற்காக நதியோரத்தில் உலாவிக்கொண்டிருக்கும் ஒரு தாதியை அழைத்து அந்த

பெட்டியை தன்னிடம் கொண்டுவருமாறு உத்தரவிட்டார். பெட்டியைக் கண்ட ஏனைய தாதியரும் தோழியரும் கூட என்னவென்று தெரிந்து கொள்வதற்காக அருகே வந்தனர். "பெட்டியினுள் ஏதோ சத்தம் கேட்கிறது, அசைகிறது" என்று கூறிய தோழியிடம் அதை திறக்குமாறு கூறிய இளவரசி அருகே சென்றார். பெட்டி திறக்கப்பட்டதுமே அனைவரும் ஒரு விநாடி அதிர்ந்து போய் விட்டார்கள். "ஐயோ, குழந்தை!" என்று அலறிய படி சுற்றி முற்றி பார்க்கின்றனர்.

இரு புறமும் கீழ் பூசப்பட்ட அந்த நாணல் பெட்டியினுள்ளே சுற்றி வைக்கப்பட்டிருந்த இந்தக் குழந்தை பெட்டியை திறந்ததுமே முகம் சிவக்க அழத்தொடங்கியது.

இது ஒரு எபிரேய குழந்தையாகத்-தான் இருக்க வேண்டுமென நினைத்-தாலும் கூட, தன்னை அறியாமலே அந்தக் குழந்தையை அள்ளி அணைத்துக்கொள்கிறார் இளவரசி. அந்தப் பிஞ்சுக்குழந்தையின் சிவந்த முகமும் அழுகையும் ஒரு கணம் அவள் மனதை ஏதோ செய்து விட்டது.

இவை எல்லாவற்றையும் தூரத்தில் இருந்து பதற்றத்துடன் பார்த்துக்-கொண்டிருந்த மீரியமிற்கோ அப்போது தான் உயிர் வந்தது. தன் தம்பியின் உயிர் காப்பாற்றப்பட்டதை எண்ணி கடவுளுக்கு நன்றி சொல்கிறாள். பொங்கி எழுகின்ற கண்ணீரை துடைத்துக்-கொண்டு ஒரு பெருமூச்சில் தன் உணர்வுகளை அடக்கிக்கொள்கிறாள். தான் செய்யப்போகும் அடுத்தக்கட்ட வேலைக்காக தன்னைத்தானே ஆயத்தப்படுத்திக்கொள்கிறாள்.

மீரியம் மீண்டும் வருவாள்...

## சந்தோஷமாயிருங்கள்

ஆண்டவரின் இரட்சிப்பினால்
*ஏசாயா 25:9, சங். 13:5, சங். 35:9*

ஆண்டவரின் கிருபையிலே
*சங். 31:7*

ஆண்டவர் சிருஷ்டிக்கிறதினாலே
*ஏசாயா 65:18, சங். 149:2*

ஆண்டவரின் நியாயத்தீர்ப்புகளுக்காக
*சங். 48:11*

அவர் செய்த பெரிய காரியங்களுக்காக
*சங். 126:3*

ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக
*சங். 96:11−13*

ஆண்டவர் ராஜரிகம்பண்ணுகிறதால்
*சங். 97:1*

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"
அப்போஸ்தலர் 4:12

# வெயில் ஏற அது உருகும்

எகிப்து நாட்டிலே இஸ்ரவேலர் அடிமைகளாய் இருந்த போதிலும் அதிலிருந்து மீண்டு வந்த உடனேயே முன்னால் செங்கடல் வழியை அடைத்திருக்க, பின்னால் எகிப்தியர்கள் துரத்திவருவதைக் கண்ட அவர்கள், "நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதை பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாய் இருக்குமே. பேசாமல் எகிப்தியருக்கு வேலை செய்து கொண்டிருக்கலாமே" என்றே எண்ணினர்.

அந்த நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து கர்த்தர் செய்த மகத்தான கிரியையை கண்ட இஸ்ரவேலர், வெறும் இரு மாத காலம் மட்டுமே கடந்த நிலையில், "நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாக சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்து போனோமானால் தாவிளை" என எகிப்தின் இன்பங்களுக்கு ஏங்கினார்கள்.

"முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்" என மத்தேயு 13:22ல் ஆண்டவர் இயேசு கூறிய உலகக்கவலை மற்றும் ஐசுவரியத்தின் மயக்கம் ஆகிய இவை இரண்டும் இஸ்ரவேலரின் அனுபவமாகிய செங்கடல் மற்றும் சுவையின் ஏக்கம் ஆகியவற்றுடன் ஒத்துப்போவதினால் பழைய ஏற்பாட்டில் எகிப்து எனும் நாட்டினால் இன்று இவ்வுலகம் குறிக்கப்படுகிறது என்பது தெளிவுருகிறதல்லவா!

அன்று இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து விடுபட்டு வந்தது போலவே இன்று நாமும் இந்த உலகத்தில் இருந்து விடுபட்டு வந்திருக்கிறோம். "நீங்கள் உலகத்தாராய் இராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டதாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்று ஆண்டவர் இயேசுவே யோவான் 15:19ல் கூறியுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட நாம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சென்றடையும் பாதை வனாந்தர பாதையாகும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடையும்படி நாம் பல யுத்தங்களை ஜெயிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். குறை எது நேர்ந்தாலும் இலக்கை நோக்கி செல்வது அல்லவோ சிறந்த வீரனின் உண்மை அடையாளம்?

"பந்தயத்திற்காகப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சை அடக்கமாய் இருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்." 1 கொரிந்தியர் 9:25

"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." என்ற ஆண்டவரின் வார்த்தைகளே நமக்கான வாக்குத்தத்தமாகும். கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நாம் தேவனிடம் செல்லும்

வழியை அடைந்து நித்தியஜீவனைப் பெற்றிருப்பினும் பரிபூரணமாய் அந்த ஜீவனை அனுபவிக்க பாவம் மற்றும் உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றுடன் நமக்கு போராட்டம் உண்டு.

இஸ்ரவேலருடைய வனாந்தரபயணத்தில் அவர்களுக்கு கிடைத்த மிக அரிய உன்னத அனுபவங்களில் ஒன்று தான் வானத்திலிருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்ட "மன்னா" எனும் பெயர் கொண்ட உணவு. அது உருவில் சிறிதாயினும் ருசியோ தேனாயிருந்தது.

ஆனால் அந்த மன்னாவை அவர்கள் சுவைக்க வேண்டுமாயின் முதலில் அதை அவர்கள் சேர்த்தாக வேண்டும். அதிலும் முக்கியமாக, அந்த மன்னாவை நாள் முழுதும் தங்கள் சௌகரியத்தின்படியெல்லாம் சேகரிக்க முடியாது; காலை நேரத்தில் மட்டுமே சேகரிக்கப்படக்கூடியதாயிருந்தது; வெயில் ஏற ஏற அது உருகிப்போம்.

## வெயில் ஏற ஏற அது உருகிப்போம்.

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். ஆனால் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர். நம்முடைய நிர்விசாரத்தினாலும் சோம்பலினாலும் உலகத்தில் நமக்குள்ள அலுவல்களினாலும் நாம் தேவனையும் அவரது இராஜ்யத்தையும் அலட்சியம் செய்து விட்டு நம்முடைய சௌகரியமான காலத்திலே அவரைத் தேடலாம் என்று எண்ணினால் நம் நிலைமை பரிதாபமாகிவிடும். என்னுடைய இளமையை நான் அனுபவிக்க வேண்டும்; முதிர்ந்தவனானதும் நான் தேவடைய காரியங்களில் ஈடுபடுகிறேன் என்றோ அல்லது சம்பாதிக்கும் காலத்தில் சம்பாதிக்க வேண்டும்; ஓய்வெடுக்கும் காலத்தில் சபைக்கு வருகிறேன் என்றோ கூறினால், சில வேளைகளில் நாம் நினைக்கும் அந்த வயோதிப காலமோ ஓய்வெடுக்கும் காலமோ நமக்கு கிட்டாமலேயே போய்விடலாம்.

"கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்."
ஏசாயா 55:6

"அநுக்கிரக காலத்திலே நான் உனக்கு செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்."
2 கொரிந்தியர் 6:2

## விடியற்காலம்மட்டும் வைக்கக்கூடாது

"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது."
1 யோவான் 1:3

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாம் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாய் இருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் என ஆண்டவர் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் தன்னுடைய முதலாம் நிருபத்தின் முதல் வசனத்தில் கூறுகிறார்.

பாருங்கள்! கிறிஸ்துவுடனான நம்முடைய ஐக்கியம் எப்படி படிப்படியாக முன்னேறுகிறது என. அவர் ஆதி முதல் இருந்தார்; நாம் அவரை அறியாதிருந்தோம். பின்னர் அவரை பற்றிக் கேள்வியுற்றோம். அவர் மீது விசுவாசம் வைத்த போது, தேவன்

இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்ததினாலே அவரை அறிகிற அறிவினால் நம் விசுவாசக் கண்களாலே அவரைக் கண்டோம். நமக்கு ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபை கிடைக்கும் படி நாம் அவரை நோக்கிப் பார்த்த சந்தர்ப்பங்கள் தான் எத்தனை! அவ-ரோடு நாம் இருப்பதினாலும் அவர் நம் கரம் பற்றி நம்மோடு நடப்பதினாலும் எமது துயர நேரங்களில் ஆறுதலாய் நம்மை அரவணைத்ததினாலும் அவரு-டைய ஸ்பரிசத்தை உணர்ந்த நாட்கள் தான் எத்தனை!

இப்படியாக நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்-திருக்கிறதினாலே தேவனோடு நமக்கு உண்டாயிருக்கிற தேன் போன்ற இனிமையான ஐக்கியம் எவ்வளவு இன்பமானது! ஆனால் அந்த மன்னாவை எப்படி அடுத்தநாள் வரை வைத்திருக்-காமல் அன்றன்றைக்குரிய மன்னாவை அன்றன்றைக்கே சேகரிக்க வேண்டிய-தாயிருந்ததோ அது போலவே, தேவ-னுடனான நம்முடைய அனுபவமும் அனுதினமும் நவமானதாய் இருக்க வேண்டும்.

நாம் இரட்சிக்கப்பட்ட நாளில் நாம் பெற்ற அந்த பரம அனுபவத்தை மாத்திரம் நாம் பல வருடங்களாக நினைத்துக்கொண்டிராது நாம் இனிக் குழந்தைகளாயிராமல், தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

### சிலர் மிகுதி சிலர் கொஞ்சம்

இஸ்ரவேலரில் அந்த மன்னாவை மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியா-னதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்-தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்கு தக்கதாகச் சேர்த்தார்கள்.

நம்மிலும் நாம் அனைவரும் தேவனுக்கு முன்பாக சமநிலையில் உள்ளவர்கள். ஆனால் நம்மில் ஒவ்-வொருவரும் வித்தியாசமானவர்கள். எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாய் இருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்த பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார். சரீரமும் ஒரே அவயவ-மாயிராமல் அநேக அவயவங்களாய் இருக்கிறது.

ஆகவே, நாம் மற்றவர்களைப்போல் ஆக முயற்சிக்கவும் கூடாது எல்லாரும் நம்மைப்போலவே இருக்க வேண்டும் என வற்புறுத்தவும் கூடாது.

“நம்மெல்லாருக்கும் அறிவு உண்டு என்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்.” 1 கொரிந்தியர் 8:1

எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணா-மல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணி, அழைக்-கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்-களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மை-யும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒரு-வரையொருவர் தாங்கி, சமாதான கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

# உங்களுக்கு தெரியுமா?

1. மத்தேயுவின் மறுபெயர் என்ன?
2. கட்டிலின் மேல் படுத்திருக்கும்போது இறந்த அரசன் யார்?
3. பவுலை காவலில் வைத்த பேலிக்சுக்கு பதிலாக தேசாதிபதியானவன் யார்?
4. பஞ்சகாலத்தில் எலியா எந்த ஆற்றினருகே வாழ்ந்து வந்தான்?
5. லூக்கா எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கை யாது?
6. இரண்டாம் ஊழியப்பயணத்தில் பவுலுடன் சென்றவர் யார்?
7. அப்போஸ்தலரில் முதலில் இறந்தவர் யார்?

**விடைகள்**

1. லேவி (மாற்கு 2:14)
2. இஸ்போசேத் (2 சாமுவேல் 4:7)
3. பொர்க்கியுபெஸ்து (அப்போஸ்தலர் 24:27)
4. கேரீத் (1 இராஜாக்கள் 17:5)
5. இரண்டு
6. சீலா (அப்போஸ்தலர் 15:40,41)
7. யாக்கோபு (அப்போஸ்தலர் 12:2)

தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக "ஜீவ ஒளி" சஞ்சிகையை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தயவுசெய்து கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கூடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

அல்லது

எமது வலைப்பக்கத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

## CHRISTIAN FELLOWSHIP CENTRE




(+94) 112581901
(+94) 773595533
cfellowship@sltnet.lk
www.christianfellowshipcentre.com
CFC Colombo

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.




Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 0112581901
www.christianfellowshipcentre.com